## முன்னுரை

# திருமணமென்பது தேவனுடைய திட்டத்தின்படியானது

ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும்போது அவர்கள் வாழ்த்தப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள்! திருமண நிலையில் மனிதர் வாழ வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாகவும் மனித வாழ்வு அள்ளித்தரும் மாபெரும் ஆசீர்வாதங்களை மக்கள் கண்டடையக்கூடிய நிலையாகவும் இருக்கிறது.

இன்றைய நாட்களில் மக்கள் பல்வேறு விதங்களில் திருமணத்தை அவமதிக்கிறவர்களாயிருக்கிறார்கள். சிலர் இது பற்றி கேலி செய்கின்றனர். ஆன்மீகத்தைப் பொறுத்தவரையில் மணவாழ்வை விட ஒண்டி வாழ்வே மேன்மையானது என சில மதங்கள் போதிக்கின்றன; அதன் காரணமாகவே, முழுநேர மதப் பணியாளர்கள் ஒண்டியாகவே இருந்திட வேண்டுமென்று அவர்கள் நிர்பந்திக்கிறார்கள். பிரபல ஊடகங்கள் தரும் திருமணத்தைப் பற்றிய கண்ணோட்டம் பெரும்பாலும் எதிர்மறையாகவே இருப்பது என்பது பொது நலத்திற்கு மேலும் அதிக பாதிப்பை உண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது. எடுத்துக்காட்டாக, தற்போதிய சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் திருமணமானவர்களைப் பற்றியதாக இருக்கின்றன. அந்த சிலவற்றில் எத்தனை நிகழ்ச்சிகள் இன்புற்று வாழும் (திருமண) தம்பதியரைப் பற்றிதாயிருக்கின்றன? திருமணம் செய்து கொள்ளாமலே சேர்ந்து வாழ்ந்து வரும் எண்ணற்ற தம்பதியரிடமும் திருமணத்தைப் பற்றிய எதிர்மறையான அபிப்பிராயம் நிலவுகிறது.

இந்த எதிர்மறைக் கண்ணோட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்ட விதமாக, திருமணமானது தேவனுடைய திட்டத்தால் உருவானதாக வேதாகமம் கூறுகிறது. மனித அனுபவமும் மணவாழ்வின் இன்ப நிலையை உறுதிப்படுத்துகிறது.

## திருமணம் தேவனிடமிருந்து வந்தது

*திருமணத்தை தேவன் உருவாக்கினார்.* முதல் “திருமண நிகழ்ச்சியை” அவர் நடத்தி வைத்தார். ஆதியாகமம் 1ன்படி தேவன் சகலத்தையும் “நன்றாய்” உண்டாக்கினார் (ஆதியாகமம் 1:4, 10, 12, 18, 21, 25). அவர் மனிதனை உண்டாக்கிய பின்னர் தாம் உண்டாக்கியிருந்த சகலமும் அவருக்கு “மிகவும் நன்றாய்” தோன்றியது (ஆதியாகமம் 1:31). அதன் பிறகு முதன்முதலாக ஏதோ ஒன்று “நல்லதல்ல” என்று ஆதியாகமம் 2 விவரிக்கிறது: மனிதன் தனிமையாயிருப்பது “நல்லதல்ல” என்று தேவன் கண்டார் (ஆதியாகமம் 2:18). அதனால், ஆதாமின் பக்கவாட்டிலிருந்து தேவன் ஓர் விலா எலும்பை எடுத்து பெண்ணை உருவாக்கினார். ஒரு பெண்ணைப் படைத்து அவளை ஆதாமுக்கு தேவன் பரிசளித்ததின் விளைவாக முதல் திருமணம் உருவானது. திருமண

உறவு பற்றி இயேசுவிடம் கேட்கப்பட்டபோது தொடர்ந்துவரும் அனைத்து திருமணங்களுக்குமான அடிப்படை நியதியாக அந்த நிகழ்ச்சியை அவர் சுட்டிக் காட்டினார் (மத்தேயு 19:3-9). மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று அவரே கண்டுகொண்டபடியினால் திருமணத்திற்கு தேவன் அங்கீகாரமளிக்கிறார். அதற்காகத்தான் அவர் திருமணத்தை ஏற்படுத்தியிருக்கிறார். வேதாகமம் எப்போதும் திருமணத்தை அங்கீகரித்தே பேசுகிறது.

*திருமணம் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது.* நேசம் மற்றும் திருமணம் பற்றிய சம்பவங்களை பழைய ஏற்பாடு முக்கியப்படுத்திக் காட்டுகிறது: உதாரணமாக, யாக்கோபு ராகேல் பற்றியது மற்றும் ரூத் போவாஸ் பற்றிய கதைகள். ஒரு புத்தகம் - சாலொமோனின் உன்னதப்பாட்டு - அன்பின் காதலையே முக்கிய கருப்பொருளாக கொண்டிருக்கிறது.

புதிய ஏற்பாட்டில், இயேசு ஓர் திருமண விருந்தில் கலந்துகொண்டு திருமணத்திற்கான தமது அங்கீகரிப்பை வெளிப்படுத்தினார் (யோவான் 2:1-11). கிறிஸ்துவுக்கும் சபைக்குமிடையே உள்ள உறவுமுறை கணவன் மனைவி உறவுமுறையோடு ஒப்பிட்டு பேசப்பட்டிருக்குமிடத்தில் மணவாழ்வின் பேரழகு தென்படுகிறது (எபேசியர் 5:22-33). பரலோகமானது ''தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டி''யாக சித்தரிக்கப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 21:2). கிறிஸ்தவர்களுக்கு கடினமான சூழ்நிலைகள் இருந்த சமயத்திலும் கூட ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொள்வது சரியானது எனக் கூறி, மணவாழ்விற்கான தனது அங்கீகரிப்பை பவுல் சுட்டிக் காட்டினார் (1 கொரிந்தியர் 7:26-28). எபிரெய எழுத்தாளனும் திருமணத்திற்கான திட்டவட்டமான தனது ஆதாரத்தைத் தெரிவிக்கையில், ''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும், விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்'' எனக் கூறுகிறார் (எபிரெயர் 13:4)[1]. உண்மையில், சிலர் விவாகம்பண்ணாமலிருக்க கட்டளையிடுவார்களென்பது மாபெரும் வழி விலகுதலுக்குரிய அடையாளங்களில் ஒன்று என புதிய ஏற்பாடு கூறுகிறது (1 தீமோத்தேயு 4:3).

ஆக, ஒரு தம்பதியர் திருமணம் செய்து கொள்ளும்போது, தேவனுடைய அங்கீகரிப்பைப் பெற்ற ஓர் வாழ்க்கை நிலைக்குள் பிரவேசிக்கிறார்கள். அநேகர் திருமணம் செய்துகொள்வார்கள் என்பதை வேதாகமம் குறிப்பால் உணர்த்தும் அதே வேளையில், திருமணமாகாமலே இருந்துவிடுதல் என்பதை எவ்விதத்திலும் தவறனதாக போதிப்பதில்லை. இயேசு திருமணம் செய்துகொள்ளவில்லை. பவுல் திருமணமானவரல்ல. சில சந்தர்ப்ப சூழ்நிலைகளில், பாவம் செய்யாதிருக்கக் கூடுமானால், கிறிஸ்தவர்கள் திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது நல்லது என்றும் கூட பவுல் வாதம் செய்திருக்கிறாரே (1 கொரிந்தியர் 7:38). தேவனுடைய இராஜ்யத்திலே தனித்திருப்போருக்கும் (விவாகமில்லாதவர்களுக்கும்) உரிய அந்தஸ்து உண்டு.

## திருமணத்தின் ஆசீர்வதிக்கப்பட்டநிலைபற்றி மானிட அனுபவம் உறுதி கூறுகிறது

அனைத்து கலாச்சாரங்களிலும் ஏதாகிலும் ஒரு முறைமையின்படி

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே திருமணம் அனுசரிக்கப்படுவதிலிருந்து, திருமணமானது ஓர் நல்ல காரியம் - மனிதன் வாழ்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ஓர் ஆசீர்வாதமிக்க நிலை, இயல்பான நிலையென்பது தெளிவாக புலப்படுகிறது.[2]

*திருமணமானது திருமணத் தம்பதியரை ஆசீர்வதிக்கிறதாயிருக்கிறது.* திருமணமானது விவாகப்பங்காளிகள் மீது ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுகின்றது என்பதை உணர்த்துவதற்கு சமூக அறிவியலாளர்கள் கணிசமான ஆதாரங்களை சேகரித்து வைத்துள்ளனர். எடுத்துக்காட்டாக, ஆராய்ச்சியாளர்கள் பின்வரும் கருத்துகளை முன்வைக்கின்றனர்:

(1) "திருமணமானவர்கள், வேறு எந்த மக்கள் குழுவினரையும் விட அதிக மகிழ்ச்சியுற்றிருக்க வாய்ப்புள்ளவர்களாயிருக்கின்றனர்."[3]

(2) ''திருமணமானவர்கள், திருமணமாகாதவர்களைவிட மனதிலும் உடலிலும் ஆரோக்கியமானவர்களாகவும், நெடுங்காலம் உயிர்வாழ்கிறவர்களாகவும் இருக்கின்றனர்."[4]

(3) "திருமணமானவர்கள் நாள்பட்ட வியாதிகளால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் குறைவு'' மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்னர்[5] ''மருத்துவமனையிலேயே இறந்துபோகும் வாய்ப்பும் மிகக்குறைவே. திருமணமானவர்களோடு ஒப்பிடும்போது, திருமணமாகாத ஆண்களின் இறப்பு விகிதம் 250% அதிகமானதாகவும் திருமணமாகாத பெண்களின் இறப்பு விகிதம் 50% அதிகமானதாகவும் இருக்கிறது."[6]

(4) திருமணமானது மனிதரை அதிக வெற்றியுள்ளவர்களாகவும், குடும்பங்களை அதிக செழிப்புள்ளதாகவும் ஆக்குகிறது.[7] "வயது வந்த தனியாட்களைவிட திருமணமான தம்பதியர் மேலான வருமானங்களை உடையவர்களாயிருக்கின்றனர், அத்தோடு அவர்கள் எவ்வளவு காலம் திருமணபந்தத்தில் நீடிக்கிறார்களோ அவ்வளவுக்கு அதிகமான சொத்துக்களை அவர்கள் குவிக்கிறார்கள்."[8]

(5) "திருமணமாகாதவர்களைவிட திருமணமான தம்பதியர் பாலுறவில் மேன்மையான திருப்தியை பெற்றனுபவிக்கின்றனர்."[9]

(6) உலகின் சில பகுதிகளில் திருமணமானவர்களுக்கு சட்டரீதியான நன்மைகளும் உண்டு.[10]

பொதுவாகவே திருமணமானவர்கள் மேம்பட்ட வாழ்க்கையுடையவர்களாய் இருப்பது ஏன்? அநேக காரணங்களைச் சொல்லலாம். கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளும் பாங்குடையவர்களாயிருப்பதனால் திருமணமானவர்கள் *உடல்ரீதியாக* நல்ல நிலையிலிருக்கிறார்கள், சீரிய முறையில், தாங்கள் நேசிக்கப்படுவதாக அறிந்திருப்பதாலும், அவர்கள் தங்கள் பிரச்சனைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுவதாலும் மனோரீதியாகவும் *உணர்வுரீதியாகவும்* அதிக ஆரோக்கியமுடையவர்களாயிருக்கிறார்கள். தனித்தனியே வாழ்வதை விட இருவரும் சேர்ந்து இன்னும் மலிவாக வாழ்ந்து வருவதால் அவர்கள் *பொருளாதார ரீதியிலும்* நல்ல நிலையியிருக்கிறர்கள். அவர்களுக்கு *சமூகரீதியாகவும்* அனுகூலங்களுண்டு, ஏனென்றல், முதலாவதாக, திருமணமான நபருக்கு குறைந்தபட்சம் ஒரு நண்பர் கைவசமுண்டு - அவனது அல்லது அவளது துணைவர். இரண்டாவதாக, எப்போதுமே, தம்பதியருக்கு எளிதில் நண்பர்கள் கிடைத்து விடுவார்கள். பெரும்பான்மை

*மக்கள் தொகை திருமணமானவர்களாயிருக்கும் ஒரு சமுதாயத்தில், ஒண்டிக்காரரைவிட திருமணமான தம்பதியர் அதிக இயல்பாகவே, பிறருடன் சம்பந்தம் கலந்துவிடுகிறார்கள். முடிவாக, அவர்கள் கிறிஸ்தவர்களெனில் தேவனுக்காக வாழ்வதற்கு கிறிஸ்தவ கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் ஊக்குவிக்கின்றபடியால், ஆவிக்குரிய வகையில் திருமணமானவர்கள் அதிக வலிமையுள்ளவர்களாயிருக்க வாய்ப்புள்ளது.*

*இறுதியில், இவ்வனைத்துக் காரணங்களுமே, ஆரம்பத்தில் தேவனால் சொல்லப்பட்ட கருத்தினையே வலியுறுத்துகின்றன: மனுமக்கள் தனிமையாயிருப்பது "நல்லதல்ல."*

*திருமணம் சமுதாயத்தை வளமுள்ளதாக்குகிறது. திருமணமென்பது மணத்தம்பதியரை ஆசீர்வாதமிக்கவர்களாக்குவதாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த சமுதாயத்திற்குக்கூட ஆதாயங்களை அள்ளித் தருவதாயிருக்கிறது. பிரிட்ஜெட் மஹோர் பின்வருமாறு எழுதினார்:*

> *திருமணமானது இல்லங்களை குடியிருக்க பாதுகாப்புள்ள இடங்களாக்குகிறது, ஏனெனில் வீட்டு வன்முறை, சிறுவர் கெடுக்கப்படுதல் போன்ற சமூக பிரச்சனைகளை இது கட்டுப்படுத்துகிறது.*
>
> *திருமணமான பெற்றோர் உள்ள குடும்பங்கள் அதிகமாய் வாழும் சமுதாயங்கள், குடியிருப்பதற்கு அதிக பாதுகாப்பான மற்றும் அதிகம் விரும்பத்தக்க பகுதிகளாய் இருக்கின்றன. ஏனெனில் அவர்களுக்கு பொருட்சேதமோ, இளைஞர் மத்தியில் நிலவும் குற்றச் செயலோ இருந்திட வாய்ப்புகள் குறைவு.*
>
> *வறுமைக்கும், பிறரை அண்டிப் பிழைப்பதற்கும் ஓர் மிகச் சிறந்த மாற்று மருந்து திருமணமே.*
>
> *திருமணமானவர்கள் அநேகமாக.*
>
> *ஆரோக்கியமானவர்களாகவும், பயனுள்ளவர்களாகவும் இருப்பதோடு சுறுசுறுப்புள்ள பிரஜைகளாகவும், வியாபாரங்களுக்கு உறுதுணையாகவும், மொத்தத்தில் பொருளாதாரமாகவும் விளங்குகின்றனர்.*[11]

*மேலும், திருமணத்தில் இணைந்திருக்கும் பெற்றோரின் பிள்ளைகள் அவ்வளவாக கொடுமைக்குள்ளாகாதவர்களாகவும், "மணமாகும்முன் பால் உறவு கொள்ளுதல், பொருட்சேதம் விளைவித்தல், கடமை தவறுதல், தற்கொலை செய்து கொள்ளுதல் போன்ற அபாயகரமான நடவடிக்கைகளில்" அவ்வளவாக ஈடுபடாதவர்களாகவும் இருக்க வாய்ப்புண்டு.*[12] *அவர்கள் பள்ளிகளில் சிறப்பாய் நடந்து கொள்ளுகிறவர்களாகவும் வழக்கமாக நல்ல பொருளாதார சூழ்நிலைகளை அனுபவிக்கிறவர்களாகவும் இருக்க அதிக வாய்ப்பிருக்கிறது.*[13] *ஆகவே, நீங்கள் திருமணம் செய்து கொள்ளும்போது உங்களுக்கென்று தலைசிறந்த தனிப்பட்ட நற்பலன்களைக் கொண்டுவருவதாய் மட்டுமல்லாமல் சமுதாயத்திற்கும் கூட நற்பயன்களை அளித்திடக்கூடிய ஓர் நல்ல வாழ்வினைத் தெரிந்து கொள்ளுகிறீர்கள். நீங்கள் நிச்சயமாக பாராட்டப் பட வேண்டியவர்கள்!*

## திருமணத்தின் ஆசீர்வாதங்கள் நிபந்தனைக்குட்பட்டவை

பொதுவில் திருமணமென்பது தனிப்பட்டவர்களையும் சமுதாயத்தையும் ஆசீர்வதிக்கின்றது என்பது உண்மைதான் என்றாலும், ஒவ்வொரு திருமணமும் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதில்லை.[14] சில திருமணங்கள் பங்காளிகளில் ஒருவருக்கு அல்லது இருவருக்குமே சித்திரவதையாக மாறிவிடுவதுண்டு. இத்தகைய திருமணங்கள் சமுதாயத்தை ஆசீர்வதிப்பதற்கு பதிலாக, குற்றவாளிகளை உருவாக்கி, வறுமையையும் துன்பத்தையும் விளைவித்திட ஏதுவாகின்றன. இரண்டு பேர் திருமணம் செய்து கொண்டார்கள் என்பதால் அவர்கள் மணமுடித்தவர்களாகவே நிலைத்திருப்பார்களென்று பொருளாகாது. அமெரிக்காவில் கிட்டத்தட்ட பாதி திருமணங்கள் விவாகரத்தில் முடிந்துபோகின்றன.[15] மேலும், விவாகத்தால் முறிந்துபோகாமல் இருக்கும் அநேக திருமணங்களோவென்றால், மகிழ்வற்ற திருமணங்களாக இருக்கின்றன. திருமணமான தம்பதியர் எல்லோருமே, கட்டுக்கதைகளில் சொல்லப்படுவதுபோல, “அதுமுதல் அவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தார்கள்” என்ற நிலைமையில் வாழ்ந்து கொண்டிருப்பதில்லை.

திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுக் கொண்டிருக்கிறவர்கள், திருமணம் புரிவதால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் தாமாகவே வந்துவிடுவதில்லை என்பதை அறிந்து கொள்ளவேண்டும். மாறாக, அவை அநேக தேவ ஆசீர்வாதங்களைப் போலவே, நிபந்தனைக்கு உட்பட்டவைகளாயிருக்கின்றன. உதாரணமாக, அபரிமிதமான உலகத்தினால் தேவன் நம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிறாரென்ற போதிலும், நாம் உயிர்வாழ தேவையான உணவினைப் பெறுவதற்காக நாம் உழைத்து வருவதால், இந்த உலகில் நமது பிழைப்பு நிபந்தனைக்குட்பட்டதாக இருக்கிறது. இரட்சிப்பு சம்பந்தமாக தேவன் நமக்கு அருளும் ஆசீர்வாதங்களும்கூட நம்முடைய விசுவாசம், கீழ்ப்படிதல் என்கிற நிபந்தனைகளைப் பொறுத்ததாயிருக்கிறது. அதுபோலவே, திருமணம் என்ற அமைப்பை அருளி மனுக்குலத்தை தேவன் ஆசீர்வதித்திருக்கிறார் ஆனால் திருமணத்திலுள்ள ஆசீர்வாதங்களை மக்கள் பெற்று அனுபவிப்பதற்கு அவர்களுக்கு சில தகுதிகள் இருந்தாக வேண்டும்.

அந்த நிபந்தனைகள் எவை? அந்தக் கேள்விக்கு பதிலளித்து உதவும் வகையில் பின்வரும் பாடங்கள் அமைந்துள்ளன. ஆயினும் துவக்கத்திலிருந்தே வலியுறுத்திக் கூறப்பட வேண்டிய ஓர் உண்மையென்னவென்றால்: ஒரு திருமணம் வெற்றிகரமானதாக இருக்க வேண்டுமானால் அதாவது ஒரு தம்பதியினர் மணவாழ்வில் நீடித்திருக்க, மணவாழ்வில் மகிழ்ந்திருக்க வேண்டுமானால் கணவன் மனைவி ஆகிய இருவருமே அந்த இலட்சியத்திற்காக பாடுபடவேண்டும். பிரயாசப்படாமல் எதுவும் ஒருபோதும் சாதிக்கப்பட்டதில்லை, அல்லது உங்கள் திருமணமானது நீங்கள் விரும்புவதுபோல தானாகவே ஏற்பட்டு விடுவதுமில்லை. இதை நினைவில் கொள்ளுங்கள்: *நீங்கள்* செயல்படுவீர்களேயானால், உங்கள் திருமணம் செயல்படும்!

---

குறிப்புகள்

[1]எபிரெயர் 13:4ன் முன்பாகத்தின் மற்றுமொரு மொழியாக்கம்:

*“விவாகமஞ்சம் கறைபடாதபடி காக்கப்படுவதாக”* (NRSV). *இந்த சொற்றொடரானது, ஒரு கூற்றாயிராமல்,கட்டளையாயிருக்கிறது. இரு மொழிபெயர்ப்புகளுமே சரியானதுதான்.* [2]*உலகெங்கிலுமுள்ள பெரும்பான்மை கலாச்சாரங்களில், காலாகாலமாக ஏதாவதொரு வகையான திருமணம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்திலே தேவன்தான் திருமணத்தை வடிவமைத்தவர் என எல்லா சமூகத்தினருமே கருதுவதில்லை என்று தெரியவருகிறது. எடுத்துக்காட்டாக,சிலர் பலதார மணத்தைக் கடைப்பிடித்து வந்துள்ளனர்; ஆனால் எந்தக் கலாச்சாரத்தினருமே ஓரினத்திருமணத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வந்ததில்லை.* [3]*மேலும் பல நல்ல குறிப்புகள் இந்தக் கட்டுரையின் இறுதியில் தரப்பட்டுள்ளன.* Harry Benson, “The Public Benefits of Marriage: Not Just a ‘Selection’ Effect” (http://www.2-in-2-1.com/university/publicbenefit/index2.html; Internet; accessed 23 October 2008). [4]Bridget E. Maher, “The Benefits of Marriage,” Family Research Council (http://www.frc.org/get.cfm?i=IFO3Jo2&v; Internet; accessed 18 July 2005). Youmasu J. Siewe, “The Beauty and Benefits of Marriage,” *Health*, Oklahoma Cooperative Extension Service (http://74.125.95.104 /search?q=cache:vW8nun6P8IkJ:fcs.okstate.edu/health/articles/articlef/The_Beauty_and_Benefits_of_Marriage.htm+Youmasu+J.+Siewe,+“The+Beauty+and+Benefits+of+Marriage,” +Health,+Oklahoma+Cooperative+Extension+Service&hl=en&ct=clnk&cd=1&gl=us; Internet; accessed 24 October 2008) and Todd E. Linaman, “Marriage Does Have Its Benefits!” Family Life Facts (http://www.myflr.org/Article.asp?ID=32; Internet; accessed 24 October 2008). [5]Benson. [6]Ibid. [7]Ibid. [8]Maher. [9]Ibid. [10]“On the order of 1,400 legal rights are conferred upon married couples in the US, for example” (“Legal and Economic Benefits of Marriage” [http:www.religioustolerance.org/mar_bene.htm.; Internet; accessed 29 October 2008]). *இந்த கட்டுரையில், மாநில மற்றும் நாட்டைச் சார்ந்த இருபத்தியொரு சலுகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

[11]Maher. [12]Ibid. [13]Ibid. [14]*மற்ற துறைகளைப்போலவே, திருமண விஷயத்திலும் ஆராய்ச்சி செய்கிற சமூக அறிவியலாளர்கள் சேகரிக்கும் புள்ளி விவரமானது, பொதுவாக ஒரு நாட்டின் அல்லது பகுதியின் நிலையைத் தான் வெளிப்படுத்துகிறதே ஒழிய ஏதோ ஒரு குறிப்பிட்ட திருமணத்தைப்பற்றி அல்ல. உதாரணத்திற்கு, ஒரு குறிப்பிட்ட ஆய்வில் கருத்துக்கேட்கப்பட்ட 60 சதவிகிதம் தம்பதியர், தங்களுக்கு திருமணமானதால் மகிழ்ச்சியாயிருக்கிறோம் என சொல்லிவிட்டால், அப்போது திருமணமானவர்கள்தான் மகிழ்ச்சிகரமாக இருக்கக் கூடியவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவெடுத்துவிடுவார்கள். ஆயினும், ஒரு குறிப்பிட்ட திருமணமானது மகிழ்ச்சிகரமாக தான் இருக்கும் என அது நிரூபித்திடாது. மேற்கண்ட உதாரணத்தில், 10க்கு 4பேர், எங்களுக்கு திருமணமாகாமல் இருந்தால் சந்தோஷமாயிருந்திருப்போம் என சொல்லியிருப்பார்கள்.* [15]*அமெரிக்காவில் விவாகரத்து வீதம் 50 சதவிகிதம் என்று பரவலாக பேசப்படுகிறது. ஆனால் The New York Times (2001) பத்திரிக்கையோ, உண்மையில் விவாகரத்து வீதமானது ஒருபோதும் 41 சதவிகிதத்திற்கு மேல் போனதில்லை என்பதாகவும், சமீபகாலமாக அது மேலும் குறைந்து கொண்டே வருகிறது என்பதாகவும் குறிப்பிட்டிருந்தது.* (Dan Hurley, “Divorce Rate: It’s Not as High as You Think,” *The New York Times* [19 April 2005]: F7.)

# நெடியதோர் மகிழ்வான மணவாழ்வு

*எனது மனைவி ஈவ்லினும் நானும் திருமணம் செய்து ஐம்பத்தியெட்டு வருடங்களாயிற்று. எங்களது முன்மாதிரி உங்களுக்கு ஊக்கமளித்திடும் என நம்புகிறோம்.*

*எங்களது சந்திப்பின் போதே நாங்கள் இயேசுவை உத்தமமாய் பின்பற்றுகிறவர்களாயிருந்து, சீக்கிரத்திலேயே ஒருவர் மேலொருவர் அன்பு கொண்டோம். கிறிஸ்துவுக்குள் நாங்கள் மென்மேலும் முதிர்ச்சியடையும் போது ஒருவரையொருவர் இன்னும் அதிகமாக நேசிப்போம் என நாங்கள் நம்பிக்கை கொண்டிருந்தோம். தேவனை எங்கள் "ஆதி அன்பாக" கொண்டிருப்போமானால், (வெளிப்படுத்தின விசேஷம் 2:4), நாங்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் அன்பு இன்னும் நிறைவாயிருக்கும் என்பதை அறிந்துகொண்டோம். எங்களிருவரது ஒழுக்க நெறிகளும், வாழ்வின் அடிப்படை இலட்சியங்களும் ஒத்திருந்தன. ஒரு சரியான நபரைக் கண்டுபிடிப்பதை விட, ஒரு சரியான நபராக இருப்பதில் தான் ஒரு மணவாழ்வின் வெற்றி அமைந்திருக்கிறது.*

*எங்களது பிரச்சனைகளைத் தீர்த்துகொள்வதற்கு பிரிவும், விவாகரத்தும் தான் தீர்வு என்று நாங்கள் ஒருபோதும் கருதியதில்லை. "அன்பு தற்பொழிவை நாடாது" (1 கொரிந்தியர் 13:5) என்பதை உணர்ந்து கொண்ட நாங்கள் எங்கள் சுயநலத்தை ஒழித்துக்கட்ட பாடுபட்டோம். பிலிப்பியர் 2:3, 4ல் காணப்படும் பவுலின் கூற்றின்படி வாழ்வதற்கு பிரயாசப்பட்டோம்:*

> *ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள் அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.*

*நாங்களிருவருமே ஒருவர் தனது தேவைகளை விட மற்றவரது தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க முயற்சி எடுத்துக் கொண்டோம். சுயநல கர்வம்தான் மணவாழ்க்கையில் எழும் பெரும்பான்மையான குழப்பத்திற்கு காரணமாயிருக்கிறது.*

*நாங்கள் நன்றாய் இணைந்து செயல்படுகின்றவர்கள். இன்னும் நாங்கள் மிகச்சிறந்த நண்பர்களாகத்தான் இருக்கிறோம். நாங்களிருவரும் சேர்ந்திருப்பதில் இன்பம் காண்கிறோம், ஒவ்வொரு நாளிலும் சிரிப்பதற்கும் வாய்ப்பிருப்பதற்கு முயற்சிக்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் மதிக்கிறோம். இப்போதும் கூட, நாங்கள் எல்லாவற்றிலும் ஒத்துப்போவதில்லை, என்றாலும், நாங்கள் ஞானத்திற்காக வேண்டுதல் செய்து (யாக்கோபு 1:5), அமைதியாக பேசித்தீர்த்துக் கொள்ளுகிறோம்.*

*இந்த உண்மைகளில் நீங்கள் நம்பிக்கை கொண்டு, இவைகளை கடைப்பிடிக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறோம்.*

பார்ல் கர்டிஸ்

# வெற்றியுள்ள மணவாழ்வின் அடிப்படைக் கொள்கைகள்

நானும் எனது மனைவியும் அறுபத்தியேழு வருடங்களாக நெடியதோர் மகிழ்வான மணவாழ்க்கையை உடையவர்களாயிருப்பதைக் கண்டு அநேகர் ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் எங்களுக்கோ அது வியப்பாகத் தெரிவதில்லை. ஒரு கிறிஸ்தவ கல்லூரியில் நாங்கள் சேர்ந்த ஆரம்பத்திலேயே ஒருவரையொருவர் சந்தித்து அன்பு கொண்டோம். நாங்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதற்கு இது ஏதுவாக அமைந்தது. நாங்களிருவருமே, ஒருவர் அனுசரிக்கிற கிறிஸ்தவ கொள்கைகளை மற்றொருவர் பாராட்டி, ரசித்துக் கொண்டோம். நாங்கள் சந்தித்த பின்னர் இரண்டு வருடங்களில் திருமணம் செய்துகொண்டோம். ஒருவர்மீது ஒருவர் கொண்டுள்ள உணர்வுகளில் இதுவரை நாங்கள் மாறவேயில்லை. மாறாக ஆண்டுகள் போகப்போக, ஒருவர்மீது ஒருவருக்குள்ள அன்பும், மதிப்பும் மென்மேலும் நெருக்கமானதாகவும், பிரியமானதாகவும் வளர்ந்திருக்கிறது. எங்களிருவரது வீட்டாரிலும், ஒருவரது வீட்டார் மேல் மற்றவருக்குள்ள அன்பையும், மிகுந்த மரியாதையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

நாங்களிருவருமே கிறிஸ்தவர்களாயிருப்பதனாலும், எந்தப்பிரச்சனை எழும்பினாலும் அதைத் தீர்த்துக் கொள்வதற்கு எப்போதுமே தேவ ஆலோசனையை நாடுகிறவர்களாயிருந்தபடியினாலும், வந்த பிரச்சனைகள் சிலவாயிருந்த போதிலும், அது எங்களுக்கு மிகவும் உதவிகரமாயிருந்தது. எங்களது நான்கு பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் வீட்டின் தலைவனாயிருக்கும்படிக்கு என்னை அனுமதிப்பதற்கு மேக்சின் மனமுள்ளவளாயிருந்திருக்கிறாள், நானும் கூட அவள் தாய்மைக்குரிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதில் அகமகிழ்ந்திருக்கிறேன். அதோடுகூட, எங்களது நான்கு பிள்ளைகளும் எங்களை எப்போதுமே நேசித்து மதிப்பளிப்பவர்களாயிருப்பதுவும் எங்களுக்கு ஓர் ஆசீர்வாதமாயிருக்கிறது. எங்களது பதினோரு பேரப்பிள்ளைகளின் விஷயத்திலும் இது உண்மையாயிருக்கிறதென நாங்கள் நம்புகிறோம்.

நாங்களிருவருமே இந்த அளவிற்கு நீடித்து வாழ்வதற்கு தேவன் கருணைகாட்டாமலிருந்திருந்தால் இந்த அறுபத்தியேழு வருடங்களாக நாங்கள் சேர்ந்து வாழும் பாக்கியத்தைப் பெற்றிருக்க மாட்டோம், எங்களது நீடித்த, மகிழ்வான மணவாழ்க்கைக்குரிய எல்லா புகழ்ச்சியையும் அவருக்கே செலுத்துகிறோம்.

எஸ். எப். டிம்மர்மேன்